| | | | | | |
|---|---|---|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | |
| | மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | **20/03/2024** முதல் | **24/03/2024** |
| | அறிக்கை எண் : | **023/ 2024** | வெளியீட்டு நாள் : | **19/03/2024** | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 38°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°-26° செல்சியஸ் ஆகவும் பதிவானது.மேலும் மழை பெறப்பட்டது.

| **கடந்தவார வானிலை (14.03.2024 முதல் 18.03.2024)** | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 24-03-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14/03 | 15/03 | 16/03 | 17/03 | 18/03 | **தேதி** | **நாள்-1** 20/03 | **நாள்-2** 21/03 | **நாள்-3** 22/03 | **நாள்-4** 23/03 | **நாள்-5** 24/03 |
| 0.0 | 0.0 | 0.2 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 1 | 8 | 1 | 0 |
| 38 | 39 | 38 | 38 | 38 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 38 | 38 | 37 | 38 | 38 |
| 23 | 26 | 25 | 25 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 25 | 24 | 25 | 25 |
| 1 | 4 | 4 | 3 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 5 | 5 | 4 | 3 |
| 57 | 78 | 85 | 78 | 75 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 84 | 85 | 78 | 76 |
| 28 | 38 | 36 | 34 | 39 | | 40 | 44 | 46 | 42 | 40 |
| 7 | 6 | 6 | 8 | 5 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 10 | 8 | 10 | 12 |
| கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | **கிழக்கு** | **கிழக்கு** | **கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மார்ச் 22 தேதி மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 37°-38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 24°-25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 12 கி.மீ வேகத்தில், கிழக்கு மற்றும் வடகிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

**கால்நடை வளர்ப்பு :**

கால்நடை வளர்க்கும் விவசாயிகள் கோடை காலங்களில் ஏற்படும் தீவனப்பயிர்கள் பற்றாக்குறையினை தவிர்க்கும் வகையில் பாசன வசதியுள்ள விவசாயிகள் 10 சதவீத நிலத்தில் கம்பு நேப்பியர் போன்ற தீவனப்பயிர்களை சாகுபடி செய்யலாம்.

**விவசாயம் :**

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 8 முதல் 12 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : மக்காசோளம், வெங்காயம், கால்நடை.**

**மக்காசோளம்:**

மக்காச்சோளப் பயிரில் படைப்புழுவின் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதன் புழுக்கள் இலையுறைக்கும், தண்டிற்கும் இடையே குடைந்து சென்று நடுக்குருத்தை தாக்குகிறது. இதனால் நடுக்குருத்து அழுகிவிடும்.

இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக்கையில் இனக்கவர்ச்சிப் பொறி வைக்க வேண்டும்.

மேலும் ஒரு ஏக்கருக்கு 10 என்ற எண்ணிக்கையில் பறவை தாங்கிகளை அமைக்க வேண்டும்.

மேலும் 10 லிட்டர் தண்ணீருக்கு 70 கிராம் அல்லது 70மில்லி என்ற அளவில் மெட்டாரைசியம் அல்லது பெவேரியா பேசியானா இவற்றில் ஏதேனும் ஒன்றுடன் 50 கிராம் நாட்டு சர்க்கரை சேர்த்து அதனுடன் 10 மில்லி ஒட்டுபசை கலந்து குருத்துப் பகுதி நன்கு நனையும்படி தெளிக்கவும்.

ரசாயண முறையில் இதனைக் கட்டுப்படுத்த நடவு செய்ததிலிருந்து 12வதுநாள், 10 லிட்டர் தண்ணீருக்கு 10கிராம் இமாமெக்டின் பென்சோயேட் மற்றும் 25மிலி பெர்மெத்ரின் உடன் ஒட்டும் பசை கலந்து பயிர்களின் குருத்துப் பகுதி நன்கு நனையும் படி தெளிக்கவும்.

**வெங்காயம்:**

வெங்காய பயிரில் போட்ரிடிஸ் இலைக்கருகல் நோய் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. நோய் தாக்குதலின் அறிகுறியானது இலைப்பரப்பில் நூற்றுக்கும் அதிகமான வெள்ளை நிறப்புள்ளிகள் காணப்படும்.

இந்த நோய் வேகமாகப் பரவி, செடியின் அனைத்து பகுதியையும் மடியச் செய்யும். மிதமான தாக்குதல் விளைச்சலைப் பாதிக்காது. ஆனால் அதிக தாக்குதல் ஏற்பட்டால் விளைச்சலை வெகுவாகக் குறைக்கும்.

இதனைக் கட்டுப்படுத்த 10லிட்டர் தண்ணீருக்கு 15கிராம் புரோப்பிநெப் 70 சதம் உடன் 10மில்லி ஒட்டுப்பசை கலந்து தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**

விவசாயிகள் தங்கள் கோழிகளை கழிச்சல் நோயிலிருந்து காப்பாற்ற, நோய் தாக்கப்பட்ட கோழிகளை தனியாக பிரித்து வைத்து பராமரிக்க வேண்டும்.

பின் நோய் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படாத கோழி மற்றும் குஞ்சுகளுக்கு 1 லிட்டர் தண்ணீரில் 2 கிராம் மைக்ரசால் பவுடர் அல்லது 2 கிராம் பேக்டிரிசால் பவுடர் மருந்துகளில் ஏதேனும் ஒன்றுடன் 5

மில்லி வைம்ரால் சிரப் இரண்டையும் கலந்து 5 நாட்களுக்கு காலை மாலை என 2 வேளை குடிக்க வைக்க வேண்டும்..